(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **95/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **PW6** | Prosecution /Defence / Court | |
| Name | **Thiru.Gunasekaran DSP of Police** | Caste | |
| Father's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

02.12.2019

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் மாவட்ட குற்ற ஆவண கூடத்தில் துணைக்காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிவருகிறேன். சம்பவ சமயமான கடந்த 12.09.2011 அன்று உதவி ஆய்வாளர் திரு.ரவி அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது சரசாள் என்கிற சரஸ்வதி நிலையம் ஆஜராகி கொடுத்தபுகாரினை பெற்று காவல்நிலைய குற்ற எண். 656/2011 பிரிவுகள் 392 **இ.த.ச–வின்** கீழ் முதஅ பதிவு செய்தார். மேற்படி **முதஅ அதசாஆ.** 4 . நான் பெருந்துறை காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது பதிவு செய்யப்பட்ட வழக்கினை மேற்படி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை 15.09.2011 ஆம் தேதி சம்பவ இடம் சென்று சாட்சிகள் லோகநாதன், செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். மேற்படி **மாதிரிவரைபடம் அதசாஆ.5** . பின்னர் சம்பவ சாட்சிகளான சரசாள் , கோவிந்தன், சுப்பிரமணி , செல்வராஜ், லோகநாதன் ஆகியோர்களை தனத்தனியே விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர்

18.11.2011 தேதியில் தகவலின் பேரில் பெருந்துறையிலிருந்து சென்னிமலை செல்லும் சாலையில் எல்லைமேட்டில் வாகன தணிக்கை செய்தபோது 18.00 மணியளவில் தெற்கிலிருந்து வடக்காக பதிவு எண் இல்லாத நீல நிற லிபரோ மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த ஒரு நபரை நிறுத்த சைகை காட்ட அவர் வாகனத்தை நிறுத்தாமல் சென்றதால் உடனிருந்து போலீஸ் பார்ட்டியுடன் சுற்றிவளைத்து பிடித்து விசாரிக்க எதிரி தனது பெயர் விலாசத்தை மாற்றிக்கூறியும் பிறகு தனது உண்மையான பெயர் மற்றும் விலாசத்தை கூறினார். தான் 18.11.2011 ஆம் தேதி பகல் 1.00 மணிக்கு பெருந்துறை விஜயமங்கலத்தில் ஒரு ஆட்டோ டிரைவரிடம் கத்தியை காட்டி பணத்தை கொள்ளையடித்ததை தானாக முன்வந்து ஒப்புக்கொண்டார். ஏற்கனவே உடன் அழைத்துசென்ற சாட்சிகள் லோகநாதன் (கிராம நிர்வாக அலுவலர்) மற்றும் தேவராஜ் கிராம உதவியாளர் முன்னிலையில் எந்த ஒரு அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் இல்லாமல் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும் எதிரி சாட்சிகள் முன்னிலையில் தானாக எடுத்து கொடுத்த கொள்ளையடித்த சுமார் 2 பவுன் எடையுள்ள தங்க செயினை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி இதர வழக்குகளின் சொத்துகளும் எதிரி அழைத்து சென்று காட்ட அதை கைப்பற்றினோம். பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவலுடன் சான்றுப்பொருளை படிவம் 91—ன் மூலமும் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

எதிரியிடம் தெரிவிக்கப்பட்டும் குறுக்குவிசாரணைக்கு அனுமதி அளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.